இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

# பரீட்சகரின் அறிக்கை

**மட்டம் II பரீட்சை – 2024 யூலை**

## (202) டிஜிடல் சூழலில் தகவல் முறைமைகள்

இவ்வினாதாள் புதிய தொழினுட்ப அபிவிருத்திகள்,தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப போக்குகள் ஆகியவற்றில் மேலதிக கவனத்தை செலுத்தி தகவல் தொழினுட்பவியலின் ஒட்டுமொத்த பகுதிகளையும் பரீட்சித்திருந்து. இவ் வினாத்தாளுக்கு விடையளிப்பதற்கு தகவல்முறைமைகளைப் பாதிக்கின்ற ஒழுக்கநெறி, சமூக, மற்றும் சட்டச் சூழல்கள் பற்றிய முற்றடக்கமான புரிதல் தேவை என்பது கவனிக்கப்படவேண்டியதாகும். இவ் வினாத்தாள் A,B, C என மூன்று பகுதிகளை கொண்டிருப்பதோடு அனைத்து வினாக்களுக்கும் விடையளிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது

அத்துடன் மதிப்பீட்டின் போது தேர்வு ஆய்வாளர்களால் அடிக்கோடிட்டுக் காட்டப்பட்ட சில முக்கிய அவதானிப்புகள் பின்வருமாறு:

### <u>பகுதி A</u>

**வினா இல. 01**

இந்த பகுதி முழுப்பாடத்திட்டத்தினையும் உள்ளடக்கும் விதத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளதுடன், பொதுவாக எல்லா மாணவர்களும் இவ் கேள்வி தொகுதிக்கு வெற்றிக்கரமான விடையளித்து. அதிக மதிப்பெண்களை பெற்றதுடன் பெரும்பாலான மாணவர்கள் திருப்திகரமான விதத்தில் விடையளித்திருந்தமை காணக்கூடியதாக இருந்தது. ஆத்துடன் பெரும்பாலான மாணவர்கள் சராசரிக்கும் அதிகமான புள்ளிகளை பெற்றுக்கொண்டது ஒரு நேர்மறையான விடயமாக இங்கு கருதப்படுகின்றது.

எவ்வாறாயினும் இவ்கேள்வி தொகுதியின் இணைதொகுப்பாக கேட்கப்பட்ட மூன்றாம் பகுதிக்கான விடைகள் ஒப்பீட்டளவில் மாணவர்களின் பலவீனத்தினை எடுத்துகாட்டுவதாக அமைந்ததுடன். மேலும் இப்பகுதிக்கு 25% புள்ளிகள் ஓதுக்கப்பட்ட நிலையில் இவ்பகுதிக்கு விடையளிக்காமல் விடுவது முழு வினாதாளிலும் குறைந்தளவு புள்ளிகளை பெற வழிவகுக்கும். ஆகையால் இப்பகுதிக்கு விடையளிக்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தப்படகின்றது.

### <u>பகுதி B</u>

**வினா இல. 02**

பெரும்பாலான மாணவர்கள் சரியான விதத்தில் விடையளித்து குறைந்தபட்ச புள்ளிகளை பெற்று இருந்தனர். இவ்கேள்வி தொகுப்பில் முதலாவது கேள்வியானது தகவலிருந்து தரவை வேறுபடுத்துமாறு கேட்கபடடிருந்தது பெரும்பாலான மாணவர்கள் சரியான விதத்தில் விடையளித்திருந்தனர்.மேலும் கேள்வி தொகுப்பின் இரண்டாம் பாகமாக தகவலின் தரபண்புகளையும் அதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைக்குமாறு கேட்க பட்டிருந்தது இக் கேள்விக்கு பெரும்பாலான மாணவர்கள் சரியான முறையில் விடையளித்திருந்தனர்.மற்றும் கேள்வி தொகுப்பின் மூன்றாம் பகுதியாக ஒரு நிறுவனத்தின் தீர்மானம் எடுத்தல் முடிவுகளில் தகவல் தொழிற்நுடபம் எவ்வாறு பங்களிப்பு செய்கின்றது பற்றியதாகும் பெரும்பாலான மாணவர்கள் இக் கேள்விக்கு சரியான விதத்தில் விடையளக்க தவறியதுடன் மேலும் பெரும்பாலான மாணவர்கள் இக்கேள்விக்கு விடையளிப்பதை புறக்கணித்துள்ளர். இதனடிப்படையில் மாணவர்கள் இக் கேள்வியாக சரியாக புரிந்து கொள்ளவில்லை என தெரிகிறது.

**வினா இல. 03**

இவ் கேள்வி தொகுதியானது தகவல் தொழினுட்பதின் உட்கட்டமைப்பு கூறுகள் பற்றியதாகும். இருப்பினும் மாணவர்கள் சரியான விடையளிக்க தவறியிருந்தனர். அத்துடன் சில மாணவர்கள் சரியான விடையளித்திருந்தாலும். பெரும்பாலான மாணவர்கள் தகவல் சேமிப்பு தொடர்பான உதாரணங்களை எடுத்துரைத்திரந்தனர்

பெரும்பாலான மாணவர்கள் பகுதி **b** மற்றும் **C** க்கு சரியான புரிதலுடன் விடையளித்திருந்தனர்.

**வினா இல. 04**

**(a)** பெரும்பாலான மாணவர்கள் இந்த கேள்விக்கு போதுமான அறிவுதிறனுடன் விடையளித்திருந்தனர் தொழிற்நுட்ப முறைகளை சரியான விதத்தில் அடையானம்கண்டு செயற்பாட்டு முறைமைகளை பெயரிட்டு விடையளித்திருந்தனர். அத்துடன் பொதுவாக திருப்த்திகரமான முறையில் விடையளிக்கப்பட்டிருந்தது.

**(b)** மாணவர்கள் தரவுச்சுரங்கம் பற்றிய இக் கேள்விக்கு முழுமையாக புரிந்து சரியாக விடையளித்து புள்ளிகளை பெற்றுக்கொண்டு இருந்தது காணக்கூடியதாக இருந்தது.

**(c)** பெரும்பாலான மாணவர்கள் இந்த கேள்விக்கு விடையளிக்க தவறியுள்ளனர். மாணவர்கள் கொடுக்கப்பட்ட நிறுவனங்களின் தரவு சுரங்க செயலிகள் பற்றிய போதிய விளக்கமின்மையுன் விடையளித்துள்ளது காணக்கூடியதாக உள்ளது.

**வினா இல. 05**

இவ் கேள்வி தொகுதிக்கு குறைந்த மட்டத்திலே விடையளித்துள்ளது காணக்கிடைக்கின்றது.

**(a)** பெரும்பாலான மாணவர்கள் தரவை பாதுகாப்தில் தொழிநுட்ப எண்ணக்கருவவையும் கோடபாடுகளையும் சரியான விதத்தில் அடையாளம் கண்டு விடையளிக்க தவறியுள்ளனர்.

**(b)** இவ் கேள்வியானது இலங்கை பாராளுமன்றத்தில தொழிநுட்ப ரீதியான சட்டக்கோவை பற்றியதாகும் சில மாணவர்கள் சரியாக விடையளித்து புள்ளிகளை பெற்றுக்கொண்டாலும் பெரும்பாலான மாணவர்கள் இலங்கை கம்பனி சட்டம் 7 -2007 பற்றிய விரிவாக்த்தினை அடிப்படையாக கொண்டு விடையளித்திருந்தனர்

**(c)** இக் கேள்விக்கு தொழிற்நுட்ப முறையினை மேம்படுத்தும் போது சூழலுக்கு ஏற்படும் தாக்கத்தினை பற்றியதாகும். மாணவர்களின் விடைகளை பரீசீலிக்கும் போது பொது அறிவினை பயன்படுத்தி பெரும்பாலான மாணவர்கள் சரியாக விடையளித்து புள்ளிகளை பெற்றுக்கொண்டனர்.

**வினா இல. 06**

இவ் கேள்வி தொகுதிக்கு குறைந்த மட்டத்திலே விடையளித்துள்ளது காணக்கிடைக்கின்றது.

**(a)** குறியீட்டு நாணயங்கள் பற்றிய கேள்வியாகும் சில மாணவர்கள் மட்டுமே சரியான விடையினை அளித்திருந்தனர். அத்துடன் டீடழஉம ஊாயடை தொழிற்நுட்பம் குறியீட்டு நாணயங்களுக்கு எவ்வாறு பங்களிக்கின்றன என்பதும் தகவல் தொழிற்நுட்பம் மற்றும் டிஜிடல் தொழிற்நுட்பம் பற்றிய போதிய அறிவின்மை காரணமாக தவறான விடைகளை அளித்திருந்தனர.

**(b)** சுமயலறை செயற்பாடுகளில் ரோபோக்களின் ஒருங்கிணைவு பற்றிய கேள்வியாகும் மாணவர்கள் தங்கள் பொது அறிவினை பயனபடுத்தி சிறந்த முறையில் சரியான விடையளித்து இருந்தனர்

**(c)** இக்கேள்வி தொழில் நாட்டத்தாரர்களுக்கு தகவல்களை காட்சியமைப்பாக வைப்பதற்கு பயன்படுத்த கூடிய தகவல் வரைகலைகளுக்கான உதாரணங்கள் ஆகும் மாணவர்களு பெருமபாலானோர் கேள்வியை தவறாக புரிந்து கொண்டு தவறான விடைகளை அளித்துயிருந்தனர்

## பகுதி C

### வினா இல. 07

இவ் கேள்வி தொகுதியானது நிகழ்கால சம்பவங்களுடன் தொடர்புபட்ட தொழிறநுட்ப மென் பொருள் தகவல் முகாமைத்துவம் பெரும்பாலான மாணவர்கள் இவ்கேள்வினை அணுகியதுடனஇணையதளம் மற்றும் தொழிறநுட்ப இடையூகள் பற்றி ஒரு உதாரண களயமைப்பினை கொண்டு மாணவர்களின் அறிவினை அளவிடும் திறன்கோளாக கேட்கப்பட்டதாகும். பெரும்பாலான மாணவர்கள் இவ்கேள்வினை அணுகியதுடன் சாராசரிக்கும் அதிகமான மதிப்பெண்களை பெற்றுக்கொண்டனர்.

**(a)**

**(i)** பெரும்பாலான மாணவர்கள் இவ்கேள்வினை அணுகியதுடன் கணக்கீட்டு மென்பொருளை சரியாக அடையாளம் கண்டு குறிப்பிட்டுடன் கணனி வழி வெளியீட்டு மென்பொருளை சரியாக அடையாளப்படுத்த தவறியுள்ளனர்.

மேலும் MS Word மற்றும் MS Power Point இனை கணனி வழி வெளியீட்டு மென்பொருளாக பிழையான கருத்தினை கொணடிருக்கின்றனர்

**(ii)** DBMS பிரதிகூலங்களை எடுத்துரைப்பதற்கு பதிலாக அதன் முக்கியதுவத்தினையும் பலவீனங்களையும் குறிப்பிட்டு இருந்தனர். அத்துடன் கேள்வினை சரியாக புரிந்து கொள்ளாமல் விடையளித்து இருந்தனர்.PESTEL பகுப்பாய்வினை எடுத்துரைத்து இருந்தனர்.

**(b)** பெரும்பாலான மாணவர்களுக்கு இணைய இணைப்ப பற்றிய அறிவு குறைவாக காணப்படுவதனை அவர்களின் விடைகளின் மூலம் காணக்கூடியதாக காணப்பட்டது.

**(c)** வணிக செயற்பாடுகள் மீதான தொழிறநுட்பம் பற்றிய இக்கேள்விக்கு பெரும்பாலான

**(d)** மாணவர்கள் இக் கேள்விக்கு சரியாக விடையளித்து புள்ளிகளை பெற்றுக்கொண்டனர்.

**(e)** இக் கேள்வியானது Pigon Express நிறுவனம் தங்களது BPO பங்களிப்பினால் பெறும் நன்மைகள் பற்றியதாகும். சராசரியான மாணவர்கள் இக் கேள்விக்கு சரியாக விடையளித்து சராசரி புள்ளிகளை பெற்றுக்கொண்டு இருந்தாலும். சில மாணவர்கள் பொது கேள்வினை மீண்டும் விடையாக எழுதி மதிபெண்களை பெறவில்லை.

**(f)** பெரும்பாலான மாணவர்கள் தங்கள் சமூக வலைதளம் பற்றிய அறிவினை கொண்டு இக்கேள்விக்கு சரியான விதத்தில் விடையளித்து புள்ளிகளை பெற்றுக்கொண்டனர்

- - -

**செயல்திறனை மேம்படுத்துவதற்கான குறிப்புகள்:**

**(1)** முழுமையான பாடத்தையும் முற்றிலும் படித்தல்.

**(2)** வினாவினை தெளிவாக வாசிப்பதுடன் நேரடி விடை எதிர்பார்க்கும் வினாவிற்கு தேவையற்ற விளக்கங்கள் கொடுப்பதை தவிர்த்தல்.

**(3)** விசேடமாக பாடப்புத்தகம், நூல்கள், கையேடுகள், புத்தகங்கள், மத்தியவங்கி ஆண்டறிக்கை மற்றும் பாடத்துடன் தொடர்படைய ஏனையவற்றையும் படித்தல்.

**(4)** விடையெழுதும் போது தகவல் தொழிநுட்பத்துடன் தொடர்புடைய தத்துவார்த்த கருத்துக்கள் மற்றும் நடைமுறை அறிவினை ஒழுங்கமைந்த முறையில் முன்வைப்பதோடு தேவைப்படும் இடங்களில் உதாரணங்களை குறிப்பிடுதல் அவசியமாகும்.

**(5)** கையெழுத்து வாசிக்ககூடிய வகையில் இருப்பதோடு வினா இலக்கங்களை சரியான முறையில் தெளிவாக எழுதியிருப்பதை உறுதி செய்தல்.

**(6)** வினாத்தாளில் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களை பின்பற்றல்.

**(7)** வினாத்தாளில் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களை பின்பற்றல்.

**(8)** வினைத்திறனான நேர முகாமைத்துவத்தை பிரயோகித்தல்.

**(9)** விடைத்தளை கையளிக்கும் முன்னர் வினா இலக்கங்களை மீள சரிபார்த்தல்.

**(10)** நம்பிக்கையுடன் பரீட்சையில் அமர்தல் மற்றும் பரீட்சையில் சித்தி பெறுவதற்கான அதிகபட்ச எதிர்பார்ப்பைக் கொண்டிருத்தல்.

- * * * -